# கே.எம்.சி.எச். மருத்துவமனையில் மாரடைப்பிற்கு மகத்தான சிகிச்சை

கோவை, ஜூன் 29: உலகில் மூன்றில் ஒருவருக்கு இதயம் மற்றும் இரத்த நாள நோய்களால் மரணம் ஏற்படுகிறது. இந்தியாவில் கடந்த சில வருடங்களில் இதய நோயாளிகளின் எண்ணிக்கை பண்மடங்கு உயர்ந்துள்ளது. இதற்கு வாழ்க்கை முறை மாற்றமே முக்கிய காரணம். நோயின் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலே அறிந்து தகுந்த சிகிச்சை பெற்று, வாழ்க்கை முறையை மாற்றம் செய்தால் நலமாக வாழலாம் என்று இருதய சிகிச்சைக்கான சிறப்பு நிபுணர் டாக்டர் டி.எம்.டி.சரவணன் தெரிவித்துள்ளார்.

இதயத்திற்கு ரத்தத்தை எடுத்து செல்லும் ரத்த குழாய்களில் கொழுப்பு படிந்து அடைப்பாக மாறுகிறது. இதனால் இதயத்திற்கு செல்லும் ரத்தத்தின் அளவு குறைந்து நெஞ்சுவலி ஏற்படுகிறது. நோயின் ஆரம்ப நிலையில் உடல் உழைப்பின் போது மட்டுமே வலி ஏற்படும். ரத்த ஓட்டம் முற்றிலும் தடைபடும் போது தீராத வலி உண்டாகி மாரடைப்பு ஏற்படுகிறது.

மாரடைப்பிற்கான அறிகுறி நெஞ்சு வலியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. இடது மற்றும் வலதுபுற தோள்பட்டை வலி, கை வலி, கழுத்து, முதுகு மற்றும் மேல் வயிற்று பகுதியில் கூட வலி ஏற்படலாம். சிலருக்கு வலியே இல்லாமல் மூச்சு விடுவதில் மட்டும் சிரமம் ஏற்படும். இத்தகைய அறிகுறியுடன் வியர்வை மற்றும் வாந்தி வந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். ஏனென்றால் மாரடைப்பு வந்த முதல் ஒரு மணி நேரத்தில் நான்கில் ஒருவருக்கு மரணம் ஏற்படும்.



டாக்டர் டி.எம்.டி.சரவணன்

மாரடைப்பிற்கு உடனடி சிகிச்சையாக இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று பல வருடங்களாக பின்பற்றி வரும் ஊசி மூலம் இரத்த கட்டிகளை கரைப்பது. இதில் 40–60 சதவிகிதம் வரை மட்டுமே ரத்த ஓட்டம் சீராக வாய்ப்புள்ளது. மற்றொரு முறையான ப்ரைமறி ஆஞ்சியோ பிளாஸ்டி மூலம் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் வரை ரத்தஓட்டத்தை சீராக்கி இதயத்தை காப்பாற்ற முடியும்.

இதய நோய் வருவதற்கு புகை பிடித்தல், நீரழிவு, இரத்த அழுத்தம், கொலஸ்டிரால் அதிகரித்தல், மன அழுத்தம், உடல் பருமன், உடற்பயிற்சியின்மை ஆகியவை முக்கிய காரணங்கள் ஆகும். மேற்கத்திய நாடுகளில் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் 45 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கும் மாரடைப்பு வர வாய்ப்பு உள்ளது. ஆனால் இந்தியாவில் பத்து வருடங்களுக்கு குறைவாகவே மாரடைப்பு வருகிறது. ஆதலால் 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

பரிசோதனையின் முடிவில் இதய நோய் கண்டு பிடிக்கப்பட்டால் கொரோனரி ஆஞ்சியோகிராம் செய்ய தேவைப்படும். ஆஞ்சியோகிராம் சிகிச்சை என்பது இதயத்திற்கு செல்லும் ரத்த குழாயின் அடைப்பை துல்லியமாக கண்டு அறியும் பரிசோதனை. அடைப்பின் தன்மையை பொறுத்து ஆஞ்சியோ பிளாஸ்டி அல்லது பைபாஸ் அறுவை சிகிச்சை தேவைப்படும். அடைப்பு அதிகமில்லாத பட்சத்தில் மருந்துகள் மட்டுமே போதுமானது.

ஆஞ்சியோ பிளாஸ்டி முறையில் அடைப்பை அகற்றிய பிறகு ஸ்டெண்ட் எனப்படும் மெல்லிய உலோக குழாய் பொருத்தப்படும். இந்த சிகிச்சை செய்தவுடன் சில மணி நேரங்களில் வீட்டிற்கு செல்லலாம். நோயாளி வழக்கமான வேலைகளை ஐந்து நாட்களில் செய்யலாம்.

தற்போது உள்ள நவீன சிகிச்சை முறை மற்றும் மருந்துகளாலும் இருதய நோயை நன்கு குணப்படுத்த முடியும். அளவான உணவு, தேவையான உடற்பயிற்சியும் மிக அவசியம். புகை பிடித்தலை தவிர்க்க வேண்டும்.

கோவை கே.எம்.சி.எச் மருத்துவமனையில் இதயம் சார்ந்த பிரச்சினைகளுக்கு சிறந்த அனுபவமிக்க மருத்துவர்களை கொண்டு ஆலோசனை வழங்குவதுடன் நவீன சிகிச்சை முறைகள் நடுத்தர குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் அளிக்கப்படுகிறது. மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கே.எம்.சி.எச். மருத்துவமனையில் இருபத்தி நான்கு மணி நேரமும் பிரைமரி ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு டாக்டர் டி.எம்.டி.சரவணன் கூறினார்.